இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

சிறுபான்மை இளைஞர்களுக்கான 'நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் நிபுணத்துவத்திற்கான புதுமையான தலைமைத்துவம்' குறித்த பயிற்சித் திட்டம் (21-25 செப்டெம்பர் 2026)

இலங்கை முழுவதும் உள்ள பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த 28 சிறுபான்மை இளைஞர்களைக் கொண்ட பேராளர்கள் குழாம், 2026 செப்டெம்பர் 21 ஆம் திகதி முதல் 25 வரை நொய்டாவில் உள்ள தொழில்முயற்சியாண்மை மற்றும் சிறிய வணிக அபிவிருத்திக்கான தேசிய நிறுவனத்தில் (NIESBUD) நடைபெற்ற 'நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் நிபுணத்துவத்திற்கான புதுமையான தலைமைத்துவம்' (ILOGE) குறித்த ஐந்து நாள் பயிற்சி அமர்வுகளில் பங்கேற்றது. NIESBUD என்பது திறன் விருத்தி மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சின் ஒரு முதன்மை நிறுவனமாகும். இந்நிறுவனம் தொழில்முயற்சியாண்மை மற்றும் திறன் விருத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் பயிற்சி, ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

2. இதன் மூலம் பயிற்சியாளர்கள் தமது தலைமைத்துவ ஆளுமைகளை மேம்படுத்தவும் தலைமைத்துவம், கட்டமைப்பு ரீதியான அபிவிருத்தி மற்றும் சமூக ஈடுபாடு உள்ளிட்டவற்றிற்கான சமகால அணுகுமுறை தொடர்பான செயன்முறை ரீதியான விளக்கங்களைப் பெறவும் சந்தர்ப்பம் கிடைத்தது. புதுமையான தலைமைத்துவம், தொழில் முயற்சியாண்மை & உள்ளூர் பொருளாதார அபிவிருத்தி, சுய தலைமைத்துவம், வடிவமைப்பு சிந்தனை, தலைமைத்துவ வடிவங்கள், பயிற்சியளித்தல் மற்றும் கண்காணிப்பு, உணர்வு ரீதியான புலமை, காலநிலைசார் தலைமைத்துவம் மற்றும் சமூக மீள்திறன் உள்ளிட்ட பல தொனிப்பொருட்கள் குறித்து இந்த அமர்வுகளின்போது கவனஞ்செலுத்தப்பட்டிருந்தது. இப்பயிற்சி அமர்வுகள், பங்கேற்பாளர்கள் தாம்பெற்ற அறிவையும் திறன்களையும் தமது நிறுவனங்கள் மற்றும் சமூகங்களில் எவ்வாறு செயல்படுத்துவது என்பதைக் கண்டறிந்து, அதற்கேற்ற செயல் திட்டங்களை உருவாக்கவும் உதவின.

3. இதன் அங்கமாக இப்பேராளர்கள், தாஜ் மகால் மற்றும் ஆக்ரா கோட்டைக்கான விஜயம் உள்ளிட்ட கலாசார ரீதியான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான விஜயங்களிலும் ஈடுபட்டிருந்தனர். இந்த விஜயமானது, பங்கேற்பாளர்கள் இந்தியாவின் உயர்வான கலாசாரப் பாரம்பரியத்தை அனுபவிப்பதற்கும், அதேவேளை முறைசாரா கலந்துரையாடல்கள் மற்றும் கலாசாரப் பரிமாற்றம் சார்ந்த கற்றலில் ஈடுபடுவதற்கும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

4. இலங்கை அதிகாரிகள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் ஆளுமை விருத்தி மற்றும் திறன் அபிவிருத்தியினை வலுவாக்க இந்தியா

முன்னெடுத்திருக்கும் செயல்திட்டங்களின் அங்கமாக இது அமைகின்றது. 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் இலங்கை உத்தியோகத்தர்களுக்காக வருடாந்தம் 700 தனிப்பயனாக்கப்பட்ட ஆசனங்களை வழங்குவதாக மேற்கொண்ட அறிவிப்பின் அடிப்படையில் இத்திட்டங்கள் நடைபெறுகின்றன.

****

கொழும்பு
01 ஒக்டோபர் 2026